**ஜூன் – 03**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு, நிதிசார் குற்றங்களுக்கு எதிரான ஒரு பெரும் போராட்டத்தில் ஆற்றிய பங்களிப்பிற்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- சென்னையைச் சேர்ந்தத் தனியார் விண்வெளி நுட்பம் சார் புத்தொழில் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், இந்தியாவின் முதல் மின்சார மோட்டார் மூலம் இயக்கப்படும் பகுதியளவு மீக்குளிர் நிலையிலான ஏவுகல இயந்திரத்தினை மிகவும் வெற்றிகரமாக சோதனை செய்து ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO), உத்தி சார் மற்றும் பாதுகாப்புப் பயன்பாடுகளுக்காக என உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குவாண்டம் திறன்களை வலுப்படுத்துவதற்காக, டெல்லியில் குவாண்டம் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தினை (QTRC) திறந்து வைத்துள்ளது.

# தேசியச் செய்திகள்

## NDA பிரிவின் மகளிர் படைப்பிரிவினர்




- தேசியப் பாதுகாப்பு பயிற்சிக் கழகத்தின் (NDA) முதல் 17 மகளிர் படைப்பிரிவினர் புனேவின் கடக்வாஸ்லாவில் உள்ள முப்படைப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சிப் பட்டம் பெற்றனர்.
- 2021 ஆம் ஆண்டில் NDA கல்வி நிறுவனத்தில் பெண்களை சேர்க்க உச்ச நீதிமன்றம் (SC) உத்தரவிட்டது.
- புனேவில் உள்ள NDA அமைப்பு உலகின் முதல் முப்படைப் பயிற்சிக் கழகம் ஆகும்.

- இளங்கலைப் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்ததற்காக வெள்ளிப் பதக்கத்தினையும், விமானப் படைத் தலைமைத் தளபதி விருதைப் பெற்ற முதல் பெண் வீரர் என்ற ஒரு பெருமையையும் ஸ்ரீதி தக்ஷ் என்பவர் பெற்றார்.

## விக்ஸித் கிருஷி சங்கல்ப் அபியான் 2025

- இது அறிவியல் ரீதியான விழிப்புணர்வு, நீடித்த நிலையான நடைமுறைகள் மற்றும் விவசாயிகளுக்கு அதிகாரமளித்தல் மூலம் இந்திய வேளாண்மையினை நவீன மயமாக்குவதற்காக தொடங்கப்பட்ட நாடு தழுவிய ஒரு பிரச்சாரமாகும்.
- இது ஆண்டுகளுக்கு இரண்டு முறை காரீப் மற்றும் ராபி விதைப்புப் பருவங்களுக்கு முன்னதாக நடத்தப்படுகிறது.
- பயிர் உற்பத்தி, மண் வளம் மற்றும் வள மேலாண்மையை மேம்படுத்துவது குறித்து சரியான நேரத்தில் கள அளவிலான வழிகாட்டுதலை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரச்சாரமானது, இந்திய வேளாண் ஆராய்ச்சிச் சபையின் 113 ஆராய்ச்சி நிறுவனங்கள், 731 கிருஷி விஞ்ஞான மையங்கள் (KVKs), வேளாண் பல்கலைக் கழகங்கள், மாநில வேளாண் துறைகள், விவசாயி-உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மற்றும் புதுமை மிக்க விவசாயிகளை அணிதிரட்டும்.
- இது 723 மாவட்டங்களில் 65,000க்கும் மேற்பட்ட கிராமங்களை உள்ளடக்கும் மற்றும் 1.3 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளை நேரடியாக ஈடுபடுத்தும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## முன்கூட்டிய அங்கீகாரத் திட்டம்





- ஏற்றுமதியாளர்களுக்கான முன்கூட்டிய அங்கீகாரத் திட்டத்தின் கீழ் சில விதிகளை தளர்த்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- உரிமம் வழங்கப்படுவதற்கு முன்பு அவர்களின் பொருட்கள் அனுப்பப் பட்டிருந்தாலும், ஏற்றுமதியாளர்களுக்கு முன்கூட்டிய அங்கீகார (AA) திட்டத்தின் கீழ் சில வரியில்லா இறக்குமதிச் சலுகைகள் அனுமதிக்கப்படுகின்றன.
- சமீப காலம் வரை, AA உரிமம் வழங்கப்பட்ட தேதிக்கு முன்னர் பொருள் வெளிநாட்டுத் துறைமுகத்தினை விட்டு ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தால், வரிவிலக்கின் பலன் எதுவும்

கிடைக்கப் பெறாது.

- மேலும் இந்தத் திட்டம் ஆனது ஏற்றுமதியாளர்கள் மூலப்பொருட்கள், கூறுகள் அல்லது ரசாயனங்கள் போன்ற உள்ளீடுகளை, அவை ஏற்றுமதிக்கான பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்யப் பயன்படுத்தப் படும் என்ற ஒரு நிபந்தனையின் பேரில் சுங்க வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கிறது.
- இருப்பினும், DGFT நிறுவனம் சிறப்பு அனுமதி வழங்காவிட்டால், நியமிக்கப்பட்ட அரசு நிறுவனங்கள் மூலம் மட்டுமே இறக்குமதி செய்யக் கூடிய வகை என்று வரையறுக்கப் பட்ட பொருட்கள் அல்லது தயாரிப்புகளுக்கு இந்தத் தளர்வு பொருந்தாது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உலகின் முதல் CRISPR சிகிச்சை





- அமெரிக்காவின் பென்சில்வேனியாவைச் சேர்ந்த KJ முல்டூன் என்ற குழந்தை, உலக அளவில் மிக அரிய நோயாக கருதப்படும் CPS1 குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட 350 மில்லியன் மக்களில் ஒருவர் ஆவார்.
- இந்தக் குழந்தையானது பெரும் தனிப்பயனாக்கப் பட்ட ஒரு மரபணுச் சிகிச்சையை மிக வெற்றிகரமாகப் பெற்ற முதல் குழந்தை ஆவார்.
- KJ முல்டூனின் உடலில் உள்ள தவறான மரபணுவை சரி செய்வதற்காக வடிவமைக்கப் பட்ட ஒரு சிகிச்சையை மருத்துவர்கள் குழு உருவாக்கியது.
- 2020 ஆம் ஆண்டில் கண்டுபிடிப்பாளர்களுக்கு நோபல் பரிசைப் பெற்றுத் தந்த CRISPR என்ற மரபணு திருத்தக் கருவியினை இந்தச் சிகிச்சைக்குப் பயன்படுத்தினர்.
- இதில் மருத்துவர்கள் "அடிப்படை மரபணுத் திருத்தம்" எனப்படுகின்ற ஒரு நுட்பத்தைப் பயன்படுத்தினர்.

## தெற்காசியாவின் மிகப்பெரிய மின்கல எரிசக்தி சேமிப்பு அமைப்பு

- தெற்காசியாவின் "மிகப்பெரியதான" 20 மெகாவாட் திறன் கொண்ட மின்கல எரிசக்தி சேமிப்பு அமைப்பு (BESS) புது தில்லியின் கிலோகாரி எனுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இது வணிக ரீதியாகச் செயல்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பயன்பாட்டு அளவிலான

இந்தியாவின் மிகப்பெரிய மின்கல எரிசக்தி சேமிப்பு அமைப்பு ஆகும்.

- இது மிகவும் சிறந்தப் பாதுகாப்பு, வெப்ப நிலைத் தன்மை மற்றும் நீடித்து நிலைக்கும் தன்மைக்குப் பெயர் பெற்ற மிக மேம்படுத்தப் பட்ட லித்தியம் இரும்பு பாஸ்பேட் (LFP) என்ற தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- லித்தியம்-இரும்பு பாஸ்பேட் (LiFePO4) வகையிலான இந்த மின்கலன்களில், லித்தியம் உலோக ஆக்சைடுக்குப் பதிலாக லித்தியம் உலோக பாஸ்பேட் கேத்தோடாகப் (எதிர் மின்வாய்) பயன்படுத்தப்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## அதிக மகசூல் தரும் 3 புதிய பயிர் வகைகள்




- மகாராஷ்டிராவின் டாக்டர் பஞ்சப்ராவ் தேஷ்முக் கிருஷி வித்யாபீடம் (PDKV) ஆனது மூன்று புதியப் பயிர் வகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தப் புதிய வகைகளில் கோதுமை வகை AKAW 5100, மஞ்சள் சோளம் கலப்பின காரிஃப் வகை CSV 65 yellow மற்றும் கொண்டைக்கடலை சூப்பர் ஜாக்கி (AKG 1402) ஆகியவை அடங்கும்.
- மகாராஷ்டிரா, கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டில் சரியான காலக்கட்டத்தில் விதைப்பதற்காக AKAW 5100 வகை அறிமுகப் படுத்தப் பட்டு உள்ளது / அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- கூடுதலாக, சோயா அவரை வகைகள் PDKV அம்பா (AMS 100-39) மற்றும் PDKV பூர்வா (AMS 2014-1), மற்றும் நிலக்கடலை வகை TAG 73 (TAG 14-73) ஆகியவை பயிரிடும் பரப்பு விரிவாக்கத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

- குஜராத்திற்கு TAG 73 நிலக்கடலை, சத்தீஸ்கருக்கு PDKV அம்பா சோயா அவரை மற்றும் அசாம், மேகாலயா மற்றும் தென்கிழக்கு மத்தியப் பிரதேசத்திற்கு PDKV பூர்வா சோயா அவரை ஆகியவை பயிரிட அங்கீகரிக்கப் பட்டுள்ளன.

# மாநிலச் செய்திகள்

## கொச்சி கப்பல் விபத்து




- கேரள மாநில அரசானது, லைபீரிய நாட்டின் சரக்குக் கப்பல் விபத்தை அம்மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவித்துள்ளது.
- IMO எண் 9123221 கொண்ட MSC ELSA-3 என்ற கப்பல் கேரளக் கடற்கரைக்கு அருகில் கடலில் மூழ்கியது.
- இதில் 13 ஆபத்தான சரக்குகள் மற்றும் 12 கால்சியம் கார்பைடுகளுடன் கூடிய 640 கொள்கலன்கள் இருந்தன.
- மாசுபாட்டிற்கான எதிர் நடவடிக்கை உபகரணங்களை ஏற்றிச் செல்லும் ICG கப்பல் சாக்சம் என்பது தளத்தில் தொடர்ந்து நிலை நிறுத்தப் பட்டுள்ளது.
- கொச்சியில் உள்ள ICG கப்பலின் கடல்சார் மீட்பு துணை மையம் (MRSC) ஆனது உடனடியாக ஒருங்கிணைந்த எதிர் நடவடிக்கையினைத் தொடங்கியது.
- கடலோரக் காவல்படையின் டோர்னியர் விமானம் வான்வழிக் கண்காணிப்புக்காக நிலை நிறுத்தப்பட்டது.
- அதைத் தொடர்ந்து, ICG ரோந்து கப்பல்கள் மற்றும் வணிகக் கப்பல்களான MV ஹான் யி மற்றும் MSC சில்வர் 2 ஆகியவை விபத்தில் சிக்கிய குழுவினருக்கு உதவ இந்தப் பகுதிக்குத் திருப்பி விடப்பட்டன.
- புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஹைதராபாத்தில் உள்ள இந்திய தேசிய கடல் சார் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.
- கொள்கலன்கள் அல்லது மிதக்கும் பொருட்களைக் கண்டறிய உதவுவதற்காக INCOIS அதன் தேடல் மற்றும் மீட்பு உதவி கருவியை (SARAT) செயல்படுத்தியுள்ளது.
- இந்திய கடலோர காவல்படை (ICG) கப்பல்களான விக்ரம், சாக்சம் மற்றும் சமர்த் ஆகியவை எண்ணெய்க் கசிவின் அளவைக் கண்டறிய அகச்சிவப்பு சார் ஒளிப்படக் கருவிகளை கொண்டு ஆராய்ந்து வருகின்றன.
- கொச்சியில் உள்ள வணிகக் கடல்சார் துறை, கப்பல் உரிமையாளர்களான MSCக்கு 1958 ஆம் ஆண்டு வணிகக் கப்பல் சட்டத்தின் கீழ் மாசுபாட்டுப் பொறுப்பு ஏற்பு எச்சரிக்கையை வெளியிட்டது.

- மாசுபாட்டு எதிர் நடவடிக்கை கப்பலான சமுத்திர பிரஹாரியும் நிலை நிறுத்தப் பட்டு உள்ளது.
- கப்பலில் இருந்து கசியும் எண்ணெய் பரவுவதைத் தடுக்க அவை எண்ணெய்க் கசிவு மீட்பு (OSD) கருவியையும் பயன்படுத்தின.

***தமிழ்நாட்டில் அதன் தாக்கம்***

- கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள சில கடலோரக் கிராமங்களில் பல பகுதிகளில் சிறிய நெகிழித் துகள்கள் (நுர்டில்ஸ்) கரை ஒதுங்கியுள்ளன.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இனயம் புத்தன்துறை, வள்ளவிளை மற்றும் இரவி புத்தன்துறை மற்றும் இன்னும் சில கடலோரக் கிராமங்களின் கரையோரத்தில் சில சேதமடைந்தத் துகள்கள் மற்றும் சிறிய நெகிழித் துகள்கள் காணப்பட்டன.
- குளச்சல் அருகே உள்ள கொடிமுனை மற்றும் வாணியக்குடி ஆகிய சில கடலோரக் கிராமங்களுக்கு இடையில் ஒரு கண்டெய்னர் கரையில் ஒதுங்கியதும் கண்டுபிடிக்கப் பட்டது.

## மகாராஷ்டிரா முதல்வர் நிவாரண நிதி




- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது, 2010 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின் பதிவிற்கு (FCRA) மகாராஷ்டிரா முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு அனுமதி அளித்துள்ளது.
- இது "சமூக நல" திட்டங்களுக்காக வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற உதவுகிறது.
- மாநில அரசின் நிவாரண அமைப்புக்கு உள்துறை அமைச்சகம் இந்த FCRA ஒப்புதலை வழங்கியது இதுவே முதல் முறையாகும்.
- இயற்கைப் பேரிடர்கள், பெரிய விபத்துகள், வகுப்புவாதக் கலவரங்கள், தீவிரவாதத் தாக்குதல்கள் அல்லது மருத்துவ மற்றும் கல்வி உதவி தேவைப்படுபவர்களுக்கு நிதி உதவியை கூடுதலாக வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மாநில அரசுகளின் நிவாரண நிதிகள் பொதுவாக உள்நாட்டு நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளில் இயங்குகின்றன.
- 2018 ஆம் ஆண்டில், கேரள வெள்ள நிவாரணத்திற்கான வெளிநாடுகளின் உதவியை இந்திய அரசு மறுத்து விட்டது.

- மகாராஷ்டிராவின் முதலமைச்சரின் நிவாரண நிதி (CMRF) ஆனது 1950 ஆம் ஆண்டு பம்பாய் பொது அறக்கட்டளைச் சட்டம் என்பதின் கீழ் ஒரு அறக்கட்டளையாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இது நிதியின் மீது ஒட்டு மொத்த மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ள முதலமைச்சரின் தலைமையில் மகாராஷ்டிர மாநில அரசினால் நன்கு நிர்வகிக்கப் படுகிறது.
- பிரதமரின் குடிமக்கள் உதவி மற்றும் அவசரகாலச் சூழ்நிலைகளில் நிவாரண நிதி அல்லது PM CARES நிதி ஆனது 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அமைக்கப்பட்டது.
- இது COVID-19 பெருந்தொற்றுநோயால் ஏற்பட்ட மிகவும் மோசமான சூழ்நிலைகளைச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- இதற்கு FCRA விதிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது.
- ஒரு சங்கம், குழு அல்லது அரசு சாரா நிறுவனம் வெளிநாட்டு நன்கொடைகளைப் பெற விரும்பினால், 1976 ஆம் ஆண்டு முதன்முதலில் இயற்றப்பட்ட அச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமாகும்.
- 1976 ஆம் ஆண்டு இச்சட்டம் ரத்து செய்யப்பட்டு 2010 ஆம் ஆண்டில் ஒரு புதிய சட்டம் கொண்டு வரப் பட்டு, அது 2020 ஆம் ஆண்டில் மீண்டும் திருத்தப்பட்டது.
- பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் சமூக, கல்வி, சமய, பொருளாதார மற்றும் கலாச்சாரத் திட்டங்களுக்காக வெளிநாட்டுப் பங்களிப்புகளைப் பெறலாம்.

# இதரச் செய்திகள்

## பருவமழையின் தொடக்கம் 2025




- ஜூன்-செப்டம்பர் மாதங்களில் 'இயல்பை விட அதிகமான' மழைப்பொழிவு பதிவாகும் என்று முன்னர் ஏப்ரல் மாதத்தில் வழங்கிய ஒரு முன்னறிவிப்பை புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்குகின்ற இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) மீண்டும் வழங்கியுள்ளது.
- இந்த தென்மேற்குப் பருவமழை காலத்தில் இந்தியா சுமார் 92 செ.மீ மழைப்பொழிவை (நீண்ட காலச் சராசரியில் 106%) பெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது என்பதோடு இது 91.3 செ.மீ (சராசரியில் 105%) மழைப் பொழிவை விட சற்று அதிகமாகும்.

- தென்மேற்குப் பருவமழையானது மே 24 ஆம் தேதியன்று கேரள மாநிலத்தில் அதன் வழக்கமான தொடக்கத்திற்கு ஒரு வாரம் முன்னதாகவே தொடங்கியதாக வானிலை மையம் கூறியது.
- வழக்கமாக, தென்மேற்குப் பருவமழையானது ஜூன் 01 ஆம் தேதி அன்று கேரளாவில் தொடங்கி ஜூலை 08 ஆம் தேதிக்குள் முழு நாட்டையும் சென்றடையும்.
- இது செப்டம்பர் 17 ஆம் தேதி வாக்கில் வடமேற்கு இந்தியாவிலிருந்து பின்னடையத் தொடங்கி அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் முழுமையாக பின்னடையும்.
- 2009 ஆம் ஆண்டு பருவமழைக்குப் பிறகு இவ்வளவு முன்னதாக பருவமழையானது தொடங்கியதில்லை.
- 1975 ஆம் ஆண்டு முதல், ஆரம்பத்தில் கேரளாவில் பருவமழையானது 1990 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதியன்று, திட்டமிட்டதை விட 13 நாட்கள் முன்னதாகவே தொடங்கியது.
- மேலும், இந்தப் பருவக்காற்றானது மும்பைக்கு முன்கூட்டியே முன்னேறியது என்ற ஒரு நிலையில் இது வழக்கத்தை விட இரண்டு வாரங்கள் முன்னதாகவே மே 26 ஆம் தேதி அன்று அந்நகரத்தை அடைந்து 35 ஆண்டுகாலச் சாதனையை விஞ்சியது.
- திபெத்தியப் பீடபூமியில் புயலுக்கு முன்னதான சுழற்சி மற்றும் உகந்த வெப்பநிலை உள்ளிட்ட சில பல்வேறு உலகளாவிய காரணிகளுடன், "பருவமழை முன்னேற்றுவதில்" காரணிகளின் ஒருங்கிணைவு ஒரு முக்கியப் பங்கை இதில் கொண்டிருந்ததாக IMD அதிகாரிகள் தெரிவித்தனர்.
- மத்திய நிலநடுக்கோட்டுப் பசிபிக் பெருங்கடலின் வெப்பமயமாதலுடன் முக்கியத் தொடர்புடைய எல் நினோ இல்லாதது சரியான பருவமழைக்குச் சாதகமான முக்கியக் காரணியாகும்.
- மேலும் இது நடைமுறையில் இருக்கும் ஆண்டுகளில் சுமார் 60% பலவீனமான பருவ மழையுடன் தொடர்புடையது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★